# பதவி வெற்றிடங்கள்

## GCF நக்கிள்ஸ் செயற்றிட்டத்திற்கான ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்

**இலங்கையின் நக்கிள்ஸ் மலைத்தொடர் பிராந்தியத்தில் உள்ள பிழைப்பூதிய விவசாயிகள் மற்றும் விவசாய பெருந்தோட்ட சமூகங்களின் காலநிலைக்கேற்ப தாக்குபிடிக்கும் தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம்**

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) 01/2019 சுற்றறிக்கை மற்றும் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி GCF நக்கிள்ஸ் செயற்றிட்டத்திற்கான "ஒப்பந்த அடிப்படையிலான" செயற்றிட்ட முகாமைத்துவ ஊழியர்களை நியமிப்பதற்காக, தகுதிவாய்ந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பசுமைக் காலநிலை நிதியம் [Green Climate Fund (GCF)] மூலம் முதன்மையாக நிதியளிக்கப்படும் இத்திட்டத்திற்கு USD 39.7 மில்லியனும், உள்நாட்டு மூலங்களிலிருந்து USD 9.2 மில்லியனும் நிதியளிக்கப்படுகிறது. இத்திட்டம் 2029.01.16 வரை ஐந்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

பதவிக்கான சம்பளம் 15/03/2019 இல் வெளியான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) சுற்றறிக்கை 01/2019 இன் படி கணக்கிடப்படும். இது நிதி அமைச்சால் மாற்றியமைக்கப்படலாம்

**செயற்றிட்ட முகாமைப் பிரிவு (PMU) பதவி வெற்றிடங்கள் – கொழும்பு**

| இல | PS வகை | பதவி | பதவி தொகை | பொருந்தும் சுற்றறிக்கை |
|---|---|---|---|---|
| 01 | PS 2 | செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர் | 01 | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (MSD) சுற்றறிக்கை 1/2019 |
| 02 | PS 3 | தொடர்பாடல் நிபுணர் | 01 | |
| 03 | PS 5 | செயற்றிட்ட செயலாளர் | 01 | |
| 04 | PS 5 | தகவல் முகாமை அலுவலர் | 02 | |

**வலய அலுவலகங்களில் பதவி வெற்றிடங்கள் (நாஉல / திகன / லக்கல)**

| இல | PS வகை | பதவி | பதவி தொகை | | | பொருந்தும் சுற்றறிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | நாஉல | திகன | லக்கல | |
| | | | மல்வது ஓயா, யானோயா நீர்நிலை, ஹுருலு வாவி கீழ் நீரோடை | கலாஓயா நீர்நிலை | கிழக்கு சரிவு நீர்நிலை (வில்கமுவ, மினிப்பே, உடுதும்பர) | |
| 01 | PS | வலய முகாமையாளர் (Zonal Manager) | 01 | 01 | 01 | மு.சே.த. சுற்றறிக்கை 1/2019 |

விண்ணப்பதாரர்கள் 62 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சி, அரசாங்க ஒழுங்கு விதிகள் பற்றிய அறிவு மற்றும் கணினி அறிவு ஆகியவை கட்டாயத் தகுதிகள் ஆகும். இலங்கையில் வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில் பணியாற்றிய அனுபவம் கூடுதல் சிறப்பாகக் கருதப்படும்.

மேலதிக தகவல்களுக்கு **www.irrigationmin.gov.lk** இணையதளத்தைப் பார்வையிடவும்.

ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் 2025 ஒக்டோபர் 6ம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கொடுக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணபிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.

செயற்றிட்ட பணிப்பாளர்
GCF நக்கிள்ஸ் திட்டம்
10வது மாடி, இல. 500, இலங்கை மகாவலி அதிகாரசபை,
டி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எந்தவிதமான பரிந்துரை முயற்சிகளும் தகுதி நீக்கத்திற்கு காரணமாகும், அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**
**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,**
திகதி: 18-09-2025

பதவி வெற்றிடங்கள்

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

இலங்கையின் நக்கிள்ஸ் மலைத்தொடர் பிராந்தியத்தில் உள்ள பிழைப்பூதிய விவசாயிகளினதும் விவசாயப் பெருந்தோட்டச் சமுதாயங்களினதும் காலநிலை மாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்கும் ஆற்றலை வலுப்படுத்தும் செயற்திட்டம்

நக்கிள்ஸ் பசுமை வலுவூட்டல் *(GCF -* நக்கிள்ஸ்*)* செயற்திட்டம்

செயற்திட்டப் பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

ஐந்து வருடங்கள் *(2029.01.16* வரை*)*

நக்ல்ஸ் மலைத்தொடர் பிரதேசத்தில் விவசாய, கிராமிய மற்றும் பெருந்தோட்டச் சமுதாயங்களின் காலநிலை மாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்கும் ஆற்றலை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தடும் *GCF* நக்கிள்ஸ் செயற்திட்டம், அதற்குரிய செயற்திட்டப் பிரதேசத்தில் நிலைபேறான காணி முகாமைத்துவத்தை ஊக்குவிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

மேற்கூறிய குறிக்கோள்களை அடைவதற்காக, இச்செயற்திட்டம் மாத்தளை, கண்டி, குருநாகல், புத்தளம், அனுராதபுரம் மாவட்டங்களில் உள்ள *46* பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இது மத்திய, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களில் உள்ள முக்கியமான நீரேந்துப் பிரதேசங்களையும், ஆறுகளையும், விவசாய சமூகங்களையும் உள்ளடக்கியுள்ளது. இந்தத் தலையீடு இந்தச் சமுதாயங்களின் நிலைபேறான வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றது.

மேலும், பொது மக்களைப் பங்கேற்கச் செய்யும் ஒரு அணுகுமுறையின் ஊடாக, இச்செயற்திட்டம் நிலைபேறான காணி மற்றும் நீர் முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு புத்தாக்க நிதியீட்டப்

பொறிமுறைகளை உருவாக்குவதிலும் நீண்ட கால நிலைபேற்றுத் தன்மைக்காக நிறுவன ஆற்றல்களைப் பலப்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்கின்றது. இது *GCF, ICRAF* மற்றும் *IUCN* போன்ற முக்கிய பங்காளர்களுடனும், பல அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடனும் இணைந்து செய்யப்படுகிறது.

பிரதானமாக பசுமைக் காலநிலை நிதியத்தால் *(GCF) 39.7* மில்லியன் அமெரிக்க டொலர்களும், உள்நாட்டு மூலங்களால் மேலதிகமான *9.2* மில்லியன் அமெரிக்க டொலர்ககளும் வழங்கப்படும் இச்செயற்திட்டம் ஐந்து மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மாவட்டங்களை மையமாகக் கொண்ட மூன்று அமுலாக்கல் அலகுகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் இச்செயற்திட்டத்தின் கீழ் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்ப தகுதிவாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. *01/2019* ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையின் இணக்கமான முறையில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டு அதற்கிணங்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

### *01.* செயற்திட்ட பிரதிப் பணிப்பாளர் *(PS 2) – 01* பதவி

சம்பள மட்டம் *:* ரூ.. *135,000.00 – 150,000.00 (01/2019* ஆம் இலக்க *MSD* சுற்றறிக்கைக்கு இணங்க*)*

தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்

*I* அல்லது *II* அல்லது *III* அல்லது *IV* கீழே

*I.* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும், உரிய துறையில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்ட பட்டமொன்று;

அல்லது

உரிய துறையிலான பட்டத்துக்குச் சமனான தகைமை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தகைமை;

அல்லது

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பிலிருந்து பெறப்பட்ட இணை உறுப்புரிமை/அதற்குச் சமமான தொழிற்தகுதி;

அத்துடன்

அந்தத் தகுதியைப் பெற்றதன் பின்னர் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது *09* வருட அனுபவத்தைக் கொண்டிருக்கவும், அதில் *04* வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான அனுபவமாக இருத்தலும் வேண்டும்.

*II.* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும், உரிய துறையில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்ட இளமானிப் பட்டமொன்று;

அல்லது

உரிய துறையிலான இளமானிப் பட்டத்துக்குச் சமனான தகைமை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தகைமை;

மற்றும்

உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட வாண்மைத் தொழில் நிறுவனத்தில் பெறப்பட்ட நிறுவனம் சார்ந்த/பட்டய உறுப்புரிமை அல்லது அதற்குச் சமனான தொழிற்தகைமையொன்று;

அல்லது

உரிய துறையில் முதுமானிப் பட்டம் மற்றும் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் *07* ஆண்டுகள் தகுதிக்குப் பிந்தைய அனுபவம். அதில் *03* வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலானதாக இருத்தல் வேண்டும்;

*III.* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும், உரிய துறையில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த இளமானிப் பட்டம்;

அல்லது

உரிய துறையிலான இளமானிப் பட்டத்துக்குச் சமனான தகைமை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தகைமை;

மற்றும்

உரிய துறையில் முதுமானிப் பட்டம்;

மற்றும்

உரிய துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வாண்மைத் தொழில் நிறுவனத்தில் பெறப்பட்ட நிறுவனம் சார்ந்த/பட்டய உறுப்புரிமை அல்லது அதற்குச் சமனான தொழிற்தகைமை;

அத்துடன்

அந்தத் தகுதியைப் பெற்றதன் பின்னர் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவத்தைக் கொண்டிருக்கவும், அதில் 02 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான அனுபவமாக இருத்தலும் வேண்டும்;

IV. அரசாங்கத்தின் நாடளாவிய சேவையொன்றில் தரம் I இலுள்ள ஒரு உத்தியோகத்தராக இருத்தல்அல்லது குறித்த துறை அதற்குச் சமமான நிலையைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

தரம் I இற்குரிய பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

02. தொடர்பாடல் நிபுணர் (PS 3) – 01 பதவி

03. வலய முகாமையாளர் - 03 பதவிகள் (PS 3) (வலய அலுவலகம் நாஉல/திகனை/லக்கலை)

சம்பள மட்டம் : ரூ.. 125,000.00 – 140,000.00 (01/2019 ஆம் இலக்க MSD சுற்றறிக்கைக்கு இணங்க)

தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்

I அல்லது II அல்லது III அல்லது IV கீழே

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும், உரிய துறையில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்ட பட்டமொன்று;

அல்லது

உரிய துறையிலான இளமானிப் பட்டத்துக்குச் சமனான தகைமை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தகைமை;

அல்லது

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பிலிருந்து பெறப்பட்ட இணை உறுப்புரிமை/அதற்குச் சமமான தொழிற்தகுதி;

அத்துடன்

முகாமைத்துவ மட்டத்தில் தகைமையைப் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது 08 வருட அனுபவம் பெற்றிருத்தல்

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும், உரிய துறையில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த இளமானிப் பட்டம்;

அல்லது

உரிய துறையிலான இளமானிப் பட்டத்துக்குச் சமனான தகைமை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தகைமை;

அல்லது

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட வாண்மைத் தொழில் நிறுவனத்தில் பெறப்பட்ட இணை உறுப்புரிமை/அதற்குச் சமமான தொழிற்தகைமை;

மற்றும்

உரிய துறையில் முதுமானிப் பட்டம் பெற்றிருத்தல் அல்லது உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட வாண்மைத் தொழில் நிறுவனத்தில் பெறப்பட்ட நிறுவனம் சார்ந்த/பட்டய உறுப்புரிமை அல்லது அதற்குச் சமனான தொழிற்தகைமையொன்று;

அத்துடன்

முகாமைத்துவ மட்டத்தில் தகைமையைப் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது 07 வருட அனுபவம் பெற்றிருத்தல்

*III.* அரசாங்கத்தின் நாடளாவிய சேவையொன்றில் தரம் *I* இலுள்ள ஒரு உத்தியோகத்தராக இருத்தல் அல்லது குறித்த துறையில் அதற்குச் சமமான நிலையைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

தரம் *I* இற்குரிய பதவியொன்றில் ஆகக் குறைந்தது *02* வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

*4.* செயற்திட்டச் செயலாளர் *(PS 5) – 01* பதவி

*5.* தகவல் முகாமை உத்தியோகத்தர் *(PS 5) – 02* பதவிகள்

சம்பள மட்டம் *:* ரூ.. *75,000.00 – 81,000.00 (01/2019* ஆம் இலக்க *MSD* சுற்றறிக்கைக்கு இணங்க*)*

தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்

*I* அல்லது *II* அல்லது *III* அல்லது *IV* கீழே

*I.* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும், உரிய துறையில் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்ட இளமானிப் பட்டமொன்று;

அல்லது

உரிய துறையிலான இளமானிப் பட்டத்துக்குச் சமனான தகைமை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தகைமை;

அல்லது

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பிலிருந்து பெறப்பட்ட இணை உறுப்புரிமை/அதற்குச் சமமான தொழிற்தகுதி;

அல்லது

தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகைம நிலை *7* க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல்;

மற்றும்

தேவையான நிபுணத்துவத் துறையில் ஆகக் குறைந்தது *03* வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

*II.* தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகைம நிலை *6* க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல்;

மற்றும்

தேவையான நிபுணத்துவத் துறையில் ஆகக் குறைந்தது *08* வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

*III.* தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகைம நிலை *5* க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல்;

மற்றும்

தேவையான நிபுணத்துவத் துறையில் ஆகக் குறைந்தது *13* வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

பொது நிபந்தனைகள்

- ❖ ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வயதெல்லை மற்றும் ஊதியங்கள்:
- *62* வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- *PS 2, 3, 4* மற்றும் *5* வரையிலான சம்பளக் குறியீட்டு வீச்சுகள் மற்றும் வயதெல்லைகள் *01/2019* ஆம் இலக்க *2019/03/15* ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டவையாகும்.

- ❖ தெரிவுசெய்யும் முறை: - அடிப்படைத் தகுதி அளவுகோல்களைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் அவர்களின் விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள், மேலும் தெரிவு செய்யப்பட்டவர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு

அழைக்கப்படுவார்கள். இந்த நேர்முகப் பரீட்சைகளின் முடிவுகளின் அடிப்படையில் பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும்.

- சேவை நிபந்தனைகள் நியனம்:- வெளிநாட்டு நிதியுதவிபெறும் செயற்திட்டங்களில் பணியாற்றி அனுபவம், செயற்திட்ட முகாமை, தொழிற்பாடுகள், மதிப்பீடு தொடர்பான தகைமைகள், தொடர்பாடல் மற்றும் அறிக்கை எழுதும் ஆற்றல்கள் அடங்கலாக ஆங்கிலம்/சிங்களம்/தமிழ் மொழித் தேர்ச்சி, வெளியீடுகள்/ஆய்வறிக்கைள் தொடர்பாடான அனுபவம் மற்றும் கணினி அறிவு என்பன அத்தியவசியமானவையாகும்.
- மேலதிக தகைமைகளில் காலநிலை மாற்றங்கள், சமுதாய மட்டச் செயற்பாடுகள், கிராமிய அபிவிருத்தி, விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் துறை நிர்வாகம் மற்றும் சுற்றாடல் முகாமை போன்ற செயற்திட்டங்களில் உள்ளடங்கும் துறைசார் அனுபவங்கள் உள்ளடங்குகின்றன.
- அரச துறையில் தற்போது பணிபுரிகின்ற விண்ணப்பதாரர்கள் கடந்த 3 வருடங்களில் திருப்திகரமான சேவைக் காலத்தை (ஒழுக்காற்று விசாரணைகள் இல்லாத) பூர்த்தி செய்திருக்கவும் உயர் செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருக்கவும் வேண்டும். மேலும், தெரிவுசெய்யப்பட்டால், இச்செயற்திட்டத்துக்கு விடுவிப்பதற்கு உடன்படுவதாக நிறுவனத் தலைவர் விண்ணப்பப் படிவத்தில் உறுதிப்படுத்த வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு செயற்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படும். செயலாற்றுகை மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்தம் சேவை நீடிக்கப்பட முடியும்.

சம்பளக் குறியீடு PS 3 - வலய முகாமையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எனினும், தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக செயற்திட்டத் தேவைகளின் அடிப்படையில் எந்தவொரு உப அலுவலகத்திலும் பணிபுரிவதற்கு விருப்பத்துடன் இருத்தல் வேண்டும்.

2025 ஒக்டோபர் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கப் பெறும் விதத்தில் பதவுத் தபால் மூலம் ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனியாக விண்ணப்பித்தல் வேண்டும். கடித உறையின்

இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

செயற்திட்டப் பணிப்பாளர்,

GCF நக்கிள்ஸ் செயற்திட்டம்,

10வது மாடி,

இல. 500, இலங்கை மகாவலி அதிகாரசபை, ரீ.பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10

குறிப்பு:

ஆட்சேர்ப்புச் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும் தகுதியற்றவராகக் கருதப்படக் காரணமாக அமையும்.

செயலாளர்

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு